தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

ஸ்ரீ கணேஷ மங்கலாஷ்டகம்

*****************************

1)

கரிமுகத்துத் தூயவனாம்,
கார்த்திகேயன் சோதரனாம்,
கௌரி ப்ரியன் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

2)

முப்புரியாய் நாகம் கொண்டான் !
பக்தர் துயர் தீர்த்தருளும்..
பூத நாதன் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

3)

இந்த்ரன், தேவன் தொழுபவனாம் !
வேண்டியதைத் தருபவனாம்
ஈசன் மகன் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

4)

இன்பம்தரும் எழில் முகனாம் !
அமுதக் குடம் கொண்டவனாம் !
தேவர் தொழும் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

5)

இளம்பிறையால் ஒளிரும் சிரம் !
ஈரிரண்டாய் அழகு கரம் !
பதம் பணிந்தார் நண்பனுக்கு மங்கலமாகட்டும் !

PSDPrasad Music

தமிழாக்கம்: ஶ்ரீதேவிபிரசாத்

ஶ்ரீ கணேஷ மங்கலாஷ்டகம்

************************

௬)

வளைந்திருக்கும் தும்பிக்கையான் !

தடை உடைக்கும் திவ்ய ரூபன் !

ஈசன் மகன் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

௭)

கர்மபலன் தருபவனாம் !

கூர்மை மதி கொண்டவனாம் !

பாவம் தீர்க்கும் அழகனுக்கு மங்கலமாகட்டும் !

௮)

பூதகண தலைவனுக்கு..

நாதன் சிவன் மைந்தனுக்கு..

தடை விலக்கும் கணபதிக்கு மங்கலமாகட்டும் !

௯)

மங்கலமாம் துதியிதனை

பக்தியுடன் துதிப்பவர்க்கு

தடைகள் நீங்கி அனைத்திலுமே மங்கலமாகுமே !

PSDPrasad Music